Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 19.10.2025 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 19.10.2025 - ஞாயிற்றுக்கிழமை          நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில், முக்கிய தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தீபாவளி பண்டிகையை மக்கள் பாதுகாப்பாக கொண்டாட வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.

திருத்தப்பட்ட GST வரி சீர்திருத்தங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தீவிரமாக ஊக்கமளித்து வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பீகார் சட்டப்பேரவைக்கு முதல் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனுக்களை திரும்பப் பெற நாளை கடைசி தினமாகும்.

***தீபாவளி (7)***

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில், பல்வேறு தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ராமபிரான் – ராவணனை அழித்த திருநாளை மக்கள் தீபாவளித் திருநாளாக கொண்டாடி வருவதாகத் தெரிவித்தார். இந்நாளில், மக்கள் அனைவரும், உடல் நலத்தோடு- வாழ்க்கையில் இன்பம் பெருகி, அனைவரது இல்லத்திலும் மகிழ்ச்சி பெருகட்டும் என தெரிவித்துள்ளார்.

***துணைநிலை ஆளுநர் புதுச்சேரி -1 (16)***

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில், மக்களிடையே ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் வளர்ப்பதற்கு இந்த நாள் அனைவரது வாழ்விலும், ஒளிமயமான எதிர்காலத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவதாக அமையட்டும் என குறிப்பிட்டுள்ளார். சுயசார்பு இந்தியா கொள்கையை பின்பற்றி, இந்திய கலைஞர்கள் உற்பத்தி செய்யும்

பரிசுப் பொருட்களை வாங்கி இந்த தீபாவளியை கொண்டாடுவதுடன் பாதுகாப்பான, சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படாத வண்ணம் கொண்டாடி மிகழ்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் பல்வேறு சமூக பின்னணிகளைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்தல், கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாத்தல், உள்ளூர் பொருட்களுக்கு வருவாய் ஈட்டுதல் போன்றவற்றிற்கு இப்பண்டிகை வழிவகை செய்வதாக குறிப்பிட்டுள்ளார். அனைவரும் பாதுகாப்பாக மகிழ்ச்சியுடன் தீபாவளி பண்டிகையை கொண்டாடி மகிழ வாழ்த்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையையொட்டி, மக்களுக்கு புதுச்சேரி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். புதுச்சேரியில் தீபாவளி பண்டிகை கொண்டாட்டம் குறித்து ஒரு செய்தித் தொகுப்பு...

**(வாய்ஸ்)**

***துணைநிலை ஆளுநர் புதுச்சேரி -2 (12)***

**(வாய்ஸ்)**

<u>நரகாசுரனை கிருஷ்ணபகவான் வீழ்த்தியதை குறிக்கும் நாளாகவும், தீபாவளி பண்டிகை ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த பண்டிகையை அனைத்து தரப்பினரும், ஒன்று சேர்ந்து வயது</u>

வித்தியாசமின்றி, மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது இந்த பண்டிகையின் சிறப்பு ஆகும். புதுச்சேரியில் இந்த தீபாவளி பண்டிகையையொட்டி, துணிக்கடைகளில் மக்கள் கூட்டம் இன்று அலைமோதியது.

கடந்த சில நாட்களாக மழை குறுக்கிட்டதால், மக்கள் வெளியே வராததால் சற்றே மந்த நிலை காணப்பட்டது. தற்போது மழை ஓரளவு குறைந்து இருப்பதால், தீபாவளியையொட்டி, மக்கள் கடைசி நேர ஷாப்பிங்கில் ஈடுபட்டு வருகின்றனர். ஆடைகள் மட்டுமல்லாமல், இனிப்பு வகைகள், பட்டாசுகளையும், மக்கள் ஆர்வமாக வாங்கிச் சென்றனர். இதனால் கடை வீதிகளில் அதிக அளவில் மக்கள் கூட்டம் நிரம்பி உள்ளது.

***பொது சுகாதாரத்துறை (14)***

தீபாவளி பண்டிகையை மக்கள் பாதுகாப்பாக கொண்டாட வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. தீபாவளி பண்டிகையின் போது பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பல்வேறு வழிமுறைகள் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதன்படி, பட்டாசுகள் வெடிக்கும்போது குழந்தைகளின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியம் என்றும், திறந்த வெளியில் பட்டாசுகள் வெடிக்க வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்டாசு வெடிக்கும் போது சுவாச பிரச்சனைகள் உள்ளவர்கள் வெளியில் வருவதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகையின்போது தீ விபத்துக்களால் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையம் உள்ளிட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தீக்காய சிகிச்சை அளிப்பதற்கான அனைத்து அத்தியாவசிய மருந்துகள் இருப்பதை சுகாதாரத்துறை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***நிர்மலா சீதாராமன் -1 (18)***

திருத்தப்பட்ட GST வரி சீர்திருத்தங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தீவிரமாக ஊக்கமளித்து வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில், மத்திய அமைச்சர்கள், திரு. அஸ்வினி வைஷ்ணவ், திரு. பியூஷ் கோயல் ஆகியோருடன் கூட்டாக இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் GST சீர்திருத்தங்களின் பயன்கள் முழுமையாக மக்களுக்குச் சென்றுள்ளதாக தெரிவித்தார். நவராத்திரி தொடங்கிய நாள் அன்று அமலுக்கு வந்த GST சீர்திருத்தங்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். அமெரிக்காவில் இந்திய பொருட்களுக்கு 50 சதவிகிதம் வரிச்சுமை அளிக்கப்பட்டதை சமாளிக்க இந்த GST சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார். வரி சீர்திருத்தம் அனைவரையும், சென்று சேர்வதை உறுதி செய்வதற்காக 54 பொருட்களின் விலைகளை நிதியமைச்சகம் உன்னிப்பாக கவனித்து வருவதாக, அவர் தெரிவித்தார். GST வரி சீர்திருத்தம் கொண்டு வரப்படும்

நிலையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமெடுத்து இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் பேசுகையில், GST சீர்திருத்தம் தற்சார்பு இந்தியாவின் வளர்ச்சிக்கு உற்சாகம் அளித்து இருப்பதாக தெரிவித்தார்.

*நிர்மலா சீதாராமன்-2 (10)*

இந்த சீர்திருத்தம் மூலம் 300 பொருட்களின் விற்பனை அதிகரித்து இருப்பதாகவும், இந்த விற்பனை கடந்த ஆண்டை காட்டிலும், 25 சதவிகிதம் அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

GST வரி சீர்திருத்தத்தால் ஒவ்வொரு குடிமக்களும் நேரடியாக பயனடைந்து பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். சுதந்திரத்திற்கு பிறகு மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய சீர்திருத்தம் இதுவென்றும் அவர் தெரிவித்தார். உலக அளவில் பொருளாதார தேக்க நிலை தொடர்ந்த போதிலும், இந்தியாவின் பொருளாதாரம் வலுவான நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*ராஜ்நாத் சிங் (13)*

காவலர் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது. இதனையொட்டி, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு, ராஜ்நாத் சிங் புதுடெல்லியில் உள்ள தேசிய காவல் நினைவிடத்தில், பணியின்போது வீரமரணம் அடைந்த காவலர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். 1959ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆம் தேதி லடாக்கி உள்ள ஹாட்ஸ்பிரிங்கில் அதிக ஆயுதம் ஏந்திய சீன படைகளால் பதுங்கியிருந்து தாக்கி கொல்லப்பட்ட 10 வீரமிக்க காவலர்களை இந்நாள் நினைவு கூறுகிறது. அதிலிருந்து ஆண்டுதோறும் காவலர் நினைவு தினம் அனுசரிக்கப் படுகிறது. இந்நாளையொட்டி, மத்திய ஆயுத காவல் படைகள் மற்றும் டெல்லி காவல் துறையின் கூட்டு அணி வகுப்பும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மத்திய உள்துறை இணையமைச்சர் மற்றும் காவல்துறையின் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் தேசிய காவல் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

*ரயில் (19)*

தீபாவளி பண்டிகையையொட்டி, பயணிகளின் நெரிசலை கட்டுப்படுத்த இந்திய ரயில்வே நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான சிறப்பு ரயில்களை இயக்கி வருகிறது. இந்த வாரம் சென்னையில் இருந்து 18 லட்சத்திற்கும் அதிகமானோர் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்ற வண்ணம் உள்ளதால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது. இருப்பினும், முக்கிய பேருந்து முனையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் கூட்டம் நிரம்பி உள்ளன. மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், புதுடெல்லியில் ரயில் நிலையத்தை நேற்று ஆய்வு செய்தார்.

பயணிகள் வசதி மையத்தின் ஒருபகுதியாக இருக்கும் ரயில் நிறுத்தும் பகுதியில் பல டிக்கெட் கவுண்டர்கள் மற்றும் கழிப்பறைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவ்விடத்தில், சுமார் 75 ஆயிரம் பயணிகள் இருந்தாலும், கூட்ட நெரிசல் கட்டுப்படுத்தப் படுவதாக அவர் தெரிவித்தார்.

பயணிகளின் வசதியை உறுதி செய்வதற்காக ரயில் ஊழியர்கள் 24 மணி நேரமும், உழைத்து வருவதாக அவர் தெரிவித்தார். தீபாவளி பண்டிகையையொட்டி, நாடு முழுவதும், சுமார் 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். பயணிகளின் பாதுகாப்பு வசதி கருதி, ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி, கேமராக்களின் செயல்பாடுகள் குறித்தும் அவர் பார்வையிட்டார்.

***GST நாகாலாந்து-1 (4)***

GST வரி சீர்திருத்தங்கள் பிரதமர் திரு. நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு, கடந்த மாதம் 22ஆம் தேதி, முதல் சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயனளித்து வருகிறது. இந்த GST வரி சீர்திருத்தங்கள் நாகாலாந்து மாநிலத்தின் பொருளாதாரத்தை உயர்த்தும் அறிக்கை குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

*நாகாலாந்து-2 (16)*

(வாய்ஸ்)

நாகாலாந்து மாநிலத்தின் வருவாயை மேம்படுத்தும் வகையில், உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முனைவோரின் தயாரிப்புகள், கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகள் போன்றவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், திருத்தப்பட்ட GST வரி 12 சதவிகிதத்தில் இருந்து – 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 44 ஆயிரம் பெண் கைவினைஞர்கள் பயன்பெறுவார்கள். நாகாலாந்து மாநிலத்தைச் சேர்ந்த கைவினைஞர்களும், பயன்பெறுவார்கள். மேலும் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூங்கில் மற்றும் கரும்பு கைவினைஞர்கள் 5 சதவிகித GST-ஆல் பயனடைவர். இந்த GST சீர்திருத்தத்தால் சுமார் 2 ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட சிறுதொழில் உரிமையாளர்கள் மற்றும் சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பெரிதும் பயனடைவர்.

மேலும் இந்த திருத்தப்பட்ட GST சீர்திருத்தங்கள் சத்தீஸ்கர் மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு எவ்வாறு உத்வேகம் அளித்துள்ளது என்பது குறித்தும் பார்ப்போம். சத்தீஷ்கர் மாநிலத்தில், கைத்தறி, கைவினைப் பொருட்கள், பால் மற்றும் சிமெண்ட் போன்ற முக்கியத் துறைகளில் 5 முதல் 18 சதவிகிதம் வரை GST வரிகள் குறைக்கப் பட்டுள்ளன.

*நாகாலாந்து-3 (5)*

மேலும் சிமெண்ட் துறையில், GST வரி, 18 சதவிகிதமாக குறைத்து இருப்பதின் மூலம் கட்டுமானச் செலவுகள் வெகுவாக குறைந்துள்ளது. மாநிலத்தில் பழங்குடியினர் மற்றும் வன கைவினைப் பொருட்களுக்கு GST வரி 5 சதவிகிதமாக குறைத்து இருப்பதன் மூலம், இதன் தேவை 10 முதல் 15 சதவிகிதம் வரை அதிகரித்து உள்ளது.

*பீகார் சட்டப்பேரவை (13)*

பீகார் சட்டப் பேரவைக்கு, இரண்டாம் மற்றும் இறுதி கட்டத்திற்கான வேட்பு மனு தாக்கல் செய்யும் பணி, 122 தொகுதிகளில் நடைபெற்று வருகிறது. வேட்பு மனுக்கள் தாக்கல் நாளை கடைசி தினமாகும். மாநிலத்தின் 20 மாவட்டங்களில் உள்ள 122 சட்டப் பேரவைத் தொகுதிகளில் அடுத்த மாதம் 11ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும். வேட்பாளர்கள், தங்கள் வேட்பு மனுக்களை இம்மாதம் 23ஆம் தேதி வரை திரும்பப் பெறலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையே, 121 சட்டமன்றத் தொகுதிகளுக்கான, முதல் கட்ட தேர்தலுக்கான, வேட்பு மனுக்களை திரும்பப் பெற நாளை கடைசி தினமாகும். பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு, அடுத்த மாதம் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இரண்டு

கட்டங்களாக நடைபெறும் தேர்தல்களில் பதிவான வாக்குகள் அடுத்த மாதம் 14ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

***சந்திரயான் -2 (10)***

இந்தியா அனுப்பிய சந்திரயான்-2 விண்கலம் முதன் முறையாக நிலவின் மீதான சூரிய ஒளிக்கற்றையை வெளியேற்றும் நிகழ்வை பூமிக்கு அனுப்பி உள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ஆம் தேதி சந்திரயான்-2 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. நிலவின் வெளிப்புறப் பகுதியில் உள்ள தகவல்களை சந்திரயான்-2 அனுப்பியதன் மூலம் விண்வெளியில் நிலவும் வானிலை தாக்கம் குறித்த தகவல் வெளிப்படுத்தப் பட்டுள்ளதாக, பெங்களூருவில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. விக்ரம் லேண்டர் பகுதியில் உள்ள தகவல் தொடர்பை சந்திரயான்-2 இழந்த போதிலும், தற்போது சூரிய ஒளிக்கற்றை வெளியேற்றும் நிகழ்வு கிடைக்கப் பெற்றிருப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

***வானிலை (5)***

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில், இன்று ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கேரளா

மற்றும் கர்நாடகா கடற்கரை பகுதிகளில் மணிக்கு 55 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில், முக்கிய தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தீபாவளி பண்டிகையை மக்கள் பாதுகாப்பாக கொண்டாட வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.

திருத்தப்பட்ட GST வரி சீர்திருத்தங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தீவிரமாக ஊக்கமளித்து வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பீகார் சட்டப்பேரவைக்கு முதல் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனுக்களை திரும்பப் பெற நாளை கடைசி தினமாகும்.